**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**
**எண்.19ஏ, ருக்மினி லட்சுமிபதி சாலை (மார்ஷல்ஸ் ரோடு),**
**எழும்பூர், சென்னை 600 008.**
தொலைபேசி: ++91-44-28411376 / 28411378 / 28411379 நிகரி: ++91-44-28411377
**மின்னஞ்சல்: tnerc@nic.in** **வலைதளம் : www.tnerc.gov.in**


எண். 3 /2013
நாள் 02–05–2013

## செய்திக் குறிப்பு

தமிழ்நாடு மின்வாரியத்தைச் சார்ந்த தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) மற்றும் தமிழ்நாடு தொடரமைப்புக் கழகம் (TANTRANSCO) ஆகிய கழகங்கள், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்பு 19–02–2013 அன்று மின்கட்டணம் மாற்றியமைப்பதற்கான தங்களுடைய விண்ணப்பங்களைத் தாக்கல் செய்துள்ளன. அந்த மனுக்கள் ஏற்கப்பட்டு, பொது மக்களின் கருத்துரைகளைப் பெறுவதற்காக இரண்டு கழகங்களும் அந்த மனுக்களின் சுருக்கமான வடிவத்தை செய்தித்தாள்களில் வெளியிடுமாறும் அந்த மனுக்களின் விவரங்கள் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு தொடரமைப்புக் கழகம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஆகியவற்றின் இணைய தளத்திலும் வெளியிடப்படுமாறும் உத்தரவிடப்பட்டது.

பொது மக்களிடமிருந்து கருத்துரைகள் பெறுவதற்கான கடைசித் தேதியன்று தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு சம்பந்தமாக 8 கருத்துரைகள் பெறப்பட்டன மற்றும் தமிழ்நாடு தொடரமைப்புக் கழகத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு சம்பந்தமாக 3 கருத்துரைகள் பெறப்பட்டன. அக்கருத்துரைகளுக்குரிய பதிலுரைகளை அனுப்பும் நடவடிக்கையில் அந்தந்த கழகங்கள் ஈடுபட்டுள்ளன. இந்தப் பொருள் குறித்து சென்னையில் 26–04–2013 அன்று நடைபெற்ற மாநில ஆலோசனைக் குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

அடுத்த கட்ட நடவடிக்கையாக, மே மாதம் 3 ஆம் தேதியன்று சென்னையிலும், 8 ஆம் தேதியன்று திருச்சியிலும், 10 ஆம் தேதியன்று மதுரையிலும், 17ஆம் தேதியன்று கோவையிலும் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டங்கள் நடைபெறவிருக்கிற தேதி மற்றும் இடம் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டும் விளம்பரங்கள் 22–04–2013 நாளிட்ட தமிழ் தினசரி செய்தித்தாள்கள் இரண்டிலும் ஆங்கிலச் செய்தித்தாள்கள் இரண்டிலும் வெளியிடப்பட்டன. முதலாவது பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் 03–05–2013 அன்று முற்பகல் 10.00 மணியிலிருந்து சென்னை 600 108 எஸ்பிளனேடிலுள்ள தமிழிசை சங்க கட்டிடத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்கு கொள்பவர்கள் முற்பகல் 9.00 மணி முதல் 10.30 மணி வரை தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கூட்டத்தில் கலந்து கொள்ள ஆர்வமுடையவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட நேரத்தின்போது, தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்யலாம் மற்றும் மின்கட்டணம் மாற்றியமைத்தல் தொடர்பான மனு மீது தங்களுடைய கருத்துரைகள்/குறிப்புரைகள்/ மறுப்புரைகள் ஆகியவற்றையும் வழங்கலாம்.

சி.குணசேகரன்
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.